மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 13.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், காலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் முரளி;

13.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், கோனேரி குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமரவேல் என்பவரின் மகன் சரத்குமார்;

14.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், அயிமிச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேஷ் என்பவரின் மனைவி பிரேமா;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

14.11.2015 அன்று வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், ஒடுக்கத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி சாந்தி மழையின் காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையின் காரணமாக உயிரிழந்த இந்த **4** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**